# வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை

இணைந்து வழங்குபவர்கள்
பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை
ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்
ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் : | புதுக்கோட்டை | காலம் : | 27/04/2024 | முதல் | 01/05/2024 |
| அறிக்கை எண் : | 034/ 2024 | வெளியீட்டு நாள் : | 26/04/2024 | | |

## புதுக்கோட்டை மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 40°-41°செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 27°-28°செல்சியஸ் ஆகவும் பதிவானது.

| கடந்தவார வானிலை (21.04.2024 முதல் 25.04.2024) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு –01-05-2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 21/04 | 22/04 | 23/04 | 24/04 | 25/04 | தேதி | நாள்-1 27/04 | நாள்-2 28/04 | நாள்-3 29/04 | நாள்-4 30/04 | நாள்-5 01/05 |
| 0.0 | 0.2 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 41 | 41 | 40 | 40 | 41 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 41 | 41 | 42 | 42 | 42 |
| 28 | 28 | 27 | 27 | 28 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 28 | 29 | 29 | 29 | 29 |
| 5 | 5 | 4 | 4 | 3 | மேக மூட்டம் (ஆக்டா) | 2 | 3 | 2 | 5 | 3 |
| 66 | 77 | 70 | 63 | 65 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 80 | 80 | 80 | 80 | 60 |
| 33 | 25 | 31 | 32 | 30 | | 20 | 20 | 20 | 20 | 20 |
| 12 | 11 | 11 | 8 | 4 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 12 | 14 | 14 | 16 | 18 |
| வட கிழக்கு | தென் கிழக்கு | வட கிழக்கு | கிழக்கு | வட கிழக்கு | **காற்றின் திசை** | **தென்** கிழக்கு | **தென்** கிழக்கு | **தென்** கிழக்கு | **தெற்கு** | **தெற்கு** |

**குறுஞ்செய்தி** :

அடுத்த 5 நாட்களுக்கு வறண்ட வானிலையே நிலவ வாய்ப்பு. அதிகபட்ச வெப்பநிலையானது 41°-42° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 28° - 29° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 12 முதல் 18 கி.மீ வேகத்தில், தென்கிழக்கு மற்றும் தெற்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

அதிக அதிகபட்ச வெப்பநிலை மற்றும் மிதமான காற்று காரணமாக ஏற்படக் கூடிய ஈரப்பத இழப்பினை ஈடுசெய்ய பயிர்களுக்கு அதிக அளவில் நீர் பாசனத்தினை மேற்கொள்ளவும்.

**கால்நடை வளர்ப்பு :**

பகல் பொழுதில் காணப்படும் அதிக வெப்பத்தின் காரணமாக ஆடு, மாடுகள் செயற்கை கருத்தரிப்பினை காலையில் 9 மணிக்குள் அல்லது மாலை 4 மணிக்கு பிறகு செய்ய வேண்டும்.

கால்நடை வளர்ப்போர் பகல் நேரங்களில் 30-60 நிமிட இடைவெளியில் 1 முதல் 5 நிமிடங்களுக்கு விலங்குகளின் உடலில் நேரடியாக தண்ணீரை தெளிப்பதன் மூலம் வெப்ப அழுத்தத்தில் இருந்து விலங்குகளை பாதுகாக்கலாம். மாட்டு கொட்டகையின் பக்கவாட்டில் (ஓரங்களில்) ஈரமான சணல் சாக்குபைகளை கட்டி விடவும். தாதுக்களுக்கான அதிகரித்த தேவையைப் பூர்த்தி செய்வதற்காக வெப்பமான காலநிலையின் போது விலங்குகளுக்கு அதிகரித்த தாது உப்புச் சேர்க்கையை உறுதி செய்யவும். கால்நடைகளுக்கு குறிப்பாக பொட்டாசியம் நிறைந்த தாதுக்கலவையினை வழங்குவதில் முன்னுரிமை அளிக்க வேண்டும்.

**விவசாயம்** :

பயறு வகைகள், காய்கறிப் பயிர்கள் மற்றும் நிலக்கடலை பயிர்களில் சாறு உறிஞ்சும் பூச்சிகள் தென்படும் இதனை கட்டுப்படுத்த 5% வேப்பங்கொட்டை கரைசல் தெளிக்கலாம்.

அடுத்த 5 நாட்களுக்கு மணிக்கு 12 முதல் 18 கி.மீ. வேகத்தில் காற்று வீசும் என எதிர்பார்க்கப்படுவதால் விவசாயிகள் கரும்பு, வாழை, பப்பாளி, கொய்யா, முருங்கை போன்ற பயிர்களுக்கு மண் அனைத்தல், முட்டுகொடுத்தல், விட்டம் கட்டுதல் போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்க்கொள்ளவும். கொடிவகை பயிர்களில் பந்தல்களில் துருபிடித்து பழுதடைந்துள்ள கம்பிகள் மற்றும் தூண்களை கண்டறிந்து சரி செய்யவும். போதுமான முட்டுகளை கொடுக்கவும். பயிர்களுக்கு மருந்து தெளிக்கும் வேலைகளை ஒத்திவைக்கவும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : கத்தரி, முருங்கை,** கால்நடை.

**கத்தரி**:

கத்தரி பயிர் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் விளைச்சலை அதிகரிக்க அல்லது மகசூல் பெற லிட்டருக்கு 5 கிராம் என்ற அளவில் காய்கறி நுண்ணூட்ட கலவையுடன் ஒட்டும் திரவம் கலந்து நட்ட 30 நாள் பிறகு ஒவ்வொரு 15 நாள் இடைவெளியில் இலைவழி தெளிப்பு தெளிக்க வேண்டும்.

**முருங்கை:**

அதிகமான வெப்பநிலையின் காரணமாக முருங்கைப் பயிரைத் தாக்கும் காய் ஈக்கள் பரவலாக தென்பட வாய்ப்பு உள்ளது. இவ்வகை ஈக்களின் தாக்குதலால் காய்கள் காய்ந்தும், பிளந்தும் காணப்படும். காய்களில் இருந்து தேன் போன்ற திரவம் வடியும்.

தாக்கப்பட்ட மற்றும் காய்ந்து விழுந்த காய்களை சேகரித்து அழிக்க வேண்டும்.
சிட்ரோனல்லா எண்ணெய், நீலகிரி தைலமர எண்ணெய், வினிகர் (அசிட்டிக்அமிலம்), டெக்ஸ்ட்ரோஸ் அல்லது லாக்டிக் அமிலம் இவற்றில் ஏதேனும் ஒன்றை வைத்து ஈக்களை கவர்ந்து அழிக்கலாம்.

ஏக்கருக்கு 7 என்ற எண்ணிக்கையில் இனக்கவர்ச்சி பொறிகளை வைத்து இதனைக் கட்டுப்படுத்தலாம்.

மேலும் ஒரு லிட்டர் தண்ணீருக்கு 3 மி.லி என்ற அளவில் நிம்பிசிடின் மருந்தினை கலந்து 50 சதம் காய் உருவான பிறகு மற்றும் 35 நாட்கள் கழித்து தெளித்து கட்டுப்படுத்தலாம்.

மருந்து தெளிப்பு வேலைகளை கண்டிப்பாக அதிகாலை வேளை அல்லது அந்தி மாலை வேளைகளில் மட்டும் மேற்கொள்ள வேண்டும்.

### கால்நடை:

கால்நடை வளர்க்கும் விவசாயிகள் தங்களின் ஆடுகளுக்கு உருளை மற்றும் நாடப்புழுக்கான குடற்புழு நீக்க மருந்தினை மே - ஜீன் மாதத்தில் அளிக்கலாம். குடற்புழு நீக்க மருந்துகளை அதிகாலை வேளையில் ஆடுகளுக்கு வெறும் வயிற்றில் கொடுக்க வேண்டும்.